




திருப்பூர் மாவட்டம், என்.காஞ்சிபுரம், கொடுவாய் எல்லப்பாளையம் புதூர் பிரிவில் நடைபெற்ற திருப்பூர் தெற்கு, வடக்கு மாவட்டக் கழக இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின்அவர்கள் சிறப்புரையாற்றினார். இதில் அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், என்.கயல்விழி செல்வராஜ், மாவட்டச் செயலாளர்கள் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., இல.பத்மநாபன், கழக இளைஞர் அணி துணை செயலாளர், கே.இ.பிரகாஷ், கழக சுற்றுச் சூழல் அணி செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி, கு.சண்முகசுந்தரம் எம்.பி., மாநகர கழக செயலாளர், மேயர் ந.தினேஷ்குமார், தெற்கு மாநகர கழக செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், ஈ.தங்கராஜ், மு.ஜெயக்குமார், சு.முத்துக்குமார், எம்.எஸ்.ஆர்.ராஜ் (எ) மணிகண்டபிரபு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### புயல் மழை: முதல்வரின் அறிவுறுத்தலின்படி

# தடையின்றி சீரான மின் விநியோகம்!

## கும்மிடிப்பூண்டி துணை மின் நிலையத்தில் ஆய்வு செய்த அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டி!

திருவள்ளூர், நவ.4

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், துரைநல்லூர் 110 கி.வோ. துணை மின் நிலையத்தில் வங்க கடலில் உருவாகியுள்ள புயல் சின்னத்தின் தாக்கத்தை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்டுவரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிகளை நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் நேற்று (03.12.2023) ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, கும்மிடிப்பபூண்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ,எஸ். கோவிந்தராஜன், மேலாண்மை இயக்குநர் (மின் தொடரமைப்பு கழகம்) மா.இராமசந்திரன், இயக்குநர் (பகிர்மானம்) இரா.மணிவண்ணன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, மழை, வெள்ள காலங்களில் மின் கசிவினால் ஏற்படும் விபத்துக்களை தடுத்திட தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள தலைமை பொறியாளர் மற்றும் மேற்பார்வை பொறியாளர்களை நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

பின்னர், அங்கு தயார் நிலையில் இருந்த களப்பணியாளர்களிடம் மின் சீரமைப்பு பணிகளில் ஈடுபடும் போது மிகுந்த கவனத்துடனும், உரிய பாதுகாப்புடனும், பாதுகாப்பு உபகரணங்களை பயன்படுத்தி பணியில் ஈடுபட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

பின்னர், நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் அறிவுறுத்தியதைப் போல, இந்த புயலால் எந்த பாதிப்பும் ஏற்படாத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த புயலின் காரணமாக மிக அதிக மான கன மழை பெய்யக் கூடிய வாய்ப்புள்ள மாவட்டமாக திருவள்ளூர் மாவட்டம் கருதப்படுவதால், கடலோரப் பகுதிகளில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று மின்வாரிய துறையின் அதிகாரிகளுக்கு அரசின் சார்பாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, மின் வாரிய அதிகாரிகள் எல்லா இடத்திலும் தயார் நிலையில் இருக்கின்றனர். மின் தடை ஏதும் ஏற்படாமல் உடனடியாக சூழ்நிலையை சமாளிக்க கூடிய அளவிற்கு களப்பணியாளர்களையும் தளவாடப் பொருட்களையும் நாங்கள் இப்போது சேமித்து வைத்துள்ளோம். எந்த சூழ்நிலையும் சமாளிக்கக் கூடிய வகையில் தளவாடப் பொருட்களை கொண்டு செல்வதற்காக லாரி, ஜேசிபி மற்றும் கிரேன் போன்ற வாகனங்களும் தயார் நிலையில் உள்ளது.

### 3 லட்சம் மின் கம்பங்கள் தயார்!

தமிழ்நாடு முழுவதுமே 3,00,000-ற்கும் மேற்பட்ட மின் கம்பங்கள் தயாராக உள்ளன. திருவள்ளூர் மாவட்டத்தில் மட்டும் ஏறத்தாழ 3,650 மின் கம்பங்கள், 450 கி.மீ. தாழ்வழுத்த மின் கம்பிகள் மற்றும் 40 மின்மாற்றிகள் தற்போது தயாராக இருக்கிறது. களப்பணியாளர்கள் பொருத்த மட்டில் 1,500 நபர்கள் தயாராக வைத்துள்ளோம்.


இந்த துணைமின் நிலையத்தில் ஏறத்தாழ 350 களப் பணியாளர்களை மின் சீரமைப்பு பணிகளுக்காக வைத்துள்ளோம். அதே போல, மிகை உயர் மின்னழுத்தப் பாதைகளைப் பொருத்தமட்டில் 15 கி.மீ. மின் கம்பிகள், 1,000 இன்சுலேட்டர்கள் மற்றும் மிகை உயர் மின்னழுத்தப் பணி செய்யக்கூடிய பணியாளர்களையும் இங்கே தயார்நிலையில் வைத்திருக்கிறோம்.

ஆக எல்லாவிதத்திலும், மின்தடை ஏற்படாத வகையிலும், அப்படி ஏதேனும் புயல் காற்றின் வேகத்தின் காரணமாக மின் தடை ஏற்பட்டாலும், உடனடியாக அந்த இடத்திலே பணி புரிய மின் வாரியத்தின் ஊழியர்கள் எல்லா நிலையிலும் தயாராக இருக்கிறார்கள்.

முதலமைச்சர் அவர்கள், முக்கியமாக பொதுமக்களின் அடிப்படை தேவைகளான குடிநீர் வசதி, மருத்துவமனை, தொலைத் தொடர்பு சாதனங்கள் மற்றும் அரசு அலுவலகங்கள் போன்றவற்றிற்கு மின்சாரம் தடைப்படாமல், முன்னுரிமை அடிப்படையில் சீரான மின்வி நியோகம் வழங்கிட வேண்டும் என அறிவுறுத்தியதின் பேரில் இன்றைக்கு இந்த துணைமின் நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டுள்ளோம்.

இவ்வாறு, நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

இந்த ஆய்வின் போது சென்னை வடக்கு மண்டல தலைமைப் பொறியாளர் சுகுமார், சென்னை வடக்கு வட்ட மேற்பார்வைப் பொறியாளர் ஏ.ஆர். மஸ்கர்னஸ் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைமை அலுவலகத்தில் செயல்பட்டு வரும் மாநில மின் பகிர்ந்தளிப்பு மையத்தில் நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆய்வு மேற்கொண்டார். உடன் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, மேலாண்மை இயக்குநர் (மின் தொடரமைப்பு கழகம்) மா.இராமசந்திரன், இயக்குனர் (பகிர்மானம்) இரா.மணிவண்ணன் மற்றும் உயர் அலுவலர்கள் உள்ளனர்.



கரூர் மாவட்ட இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டத்தில் பங்கேற்பதற்காக நேற்று கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகை தந்தபோது, கரூர் மாநகர் முழுவதும் மக்கள் திரண்டு வந்து சாலை நெடுக சிறப்பான வரவேற்பளித்தனர். இவ்வரவேற்பையொட்டி உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 'கழகத்தினர் இளைஞர் அணித் தம்பிகள் மகளிர் பொதுமக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் என் அன்பையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று குறிப்பிட்டார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை யொட்டி "முத்தமிழ்த்தேர் அலங்கார ஊர்தி, செங்கல்பட்டு மாவட்டத்திற்கு வருகை தந்ததையொட்டி, அத்தேரை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மலர்தூவி வரவேற்று, முத்தமிழ்த்தேரில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர.ராகுல் நாத், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், மாவட்ட வருவாய் அலுவலர் சுபா நந்தினி, தலைமை செயற்குழு உறுப்பினர் க.அன்புச்செல்வன், நகரச் செயலாளர் எஸ்.நரேந்திரன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் செம்பருத்தி துர்கேஷ், நகர மன்ற தலைவர் தேன்மொழி, ஒன்றிய குழு தலைவர் உதயா கருணாகரன், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.